(4) உரிமைப் பிரச்னைகள்.

(அ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்த பொருள் குறித்து மேலவையில் முதல்வர் விவரம் அறிவித்தது குறித்து எழுப்பப்பட்ட பிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னைகள் மீதான என் தீர்ப்புகள்.

சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சில கருத்துக்கள் மீது 17–3–1978 அன்று இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பியுள்ளார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் சில கோட்பாடுகளுக்கு இணங்க சட்டமன்றத்தில் இரு அவைகளும் சம உரிமைகள் பெற்றவை. ஒரு அவையில் நடைபெறும் நிகழ்ச்சி குறித்து, அது சரியா, தவறு என்பது பற்றி, அந்த அவையிலன்றி, வெளியிலே, அது சரியா, தவறு என்ற பிரச்னைகளோ நடவடிக்கைகளோ எடுக்கக் கூடாது என்று அரசியலமைப்புச் சட்டத்தின் 194 (2)-வது விதியின் கீழ் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், ஒரு அவையின் நடவடிக்கை பற்றி மற்றொரு அவையில் உரிமைப் பிரச்னை எழுப்புவதும் மரபு அல்ல என்று பல்வேறு தீர்ப்புகள் உள்ளன. அவ்வாறு நிகழுமாயின் உடனுக்குடனே அந்த அந்த அவைத் தலைவர்கள் மற்ற அவையின் உரிமையைப் பாதுகாப்பது வழக்கம்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்னையில் உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) திரு. க. சுப்பு மீது எழுப்பப்பட்ட பிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு :

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 23-3-1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பினார்கள். 22-3-1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் அவைத் தலைவர் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் சில சொற்றொடர்களை உபயோகித்து வெளிநடப்புச் செய்தார் என்றும், இது அவை உரிமை மீறிய செயல் என்றும் திரு. சேதுராம் அவர்கள் குறிப்பிட்டார்:

அவைத் தலைவர் தீர்ப்புக்கு மாசு கற்பிக்கும் வகையிலோ அல்லது கண்ணியக் குறைவாகவோ அல்லது அவைத் தலைவரின் தீர்ப்பு ஒருதலைப்பட்சமானது என்று குறிப்பிடுவதோ, அல்லது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அவைத் தலைவர் வழங்கும் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதோ இது போன்ற வேறு முறைகளில் அவையின் கண்ணியத்தைக் காப்பதாகாது என்றும், இம்மாதிரி நடவடிக்கைகள் கண்டிக்கப்படத் தக்கவை என்றும் பல்வேறு முன்மாதிரித் தீர்ப்புகள் உள்ளன. இவைகள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அன்று நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்து இனிமேல் இவ்வாறு நிகழ்ச்சி நடைபெறாது என்று தெரிவித்தால் இப்பிரச்னையை இத்தோடு விட்டுவிடலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சுப்பு அவர்கள்.

(திரு. கே. பண்ணை சேதுராம் எழுந்தார்)

திரு. க. சுப்பு: அவர் பேசுகிறாரா?

(ஒரு குரல்: யார் அவர்?

மற்றொரு குரல்: அவர் ஒரு எம். எல். ஏ.)

திரு. க. சுப்பு: அப்படியா, பரவாயில்லையே! இந்தப் பிரச்னையை விட்டுவிடுவதற்கு முன்பாக, நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் அனுமதித்த பிறகு இங்கே பேசுவதுதான் குறிப்பேட்டில் ஏறுவது வழக்கம்; நான் சொல்லிவிட்டு வெளியேறியது குறிப்பேட்டில் இருக்கிறது. என்னை உட்காரடா என்று சொன்னதை குறிப்பேட்டில் நான் தேடிக்கொண்டு இருக்கிறேன். யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருதலைப்பட்சமாக இங்கே குறிப்புகள் பதியப்படுகிறதா, தயவு செய்து எனக்குத் தெரிவியுங்கள். நான் சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது, என்னை உட்காரடா என்று சொன்னது குறிப்பேட்டில் இல்லை.

மாண்புமிகு திரு. க. உறொர். எட்மண்ட்: தலைவரவர்களே, இந்த அவையின் விதி முறைகள் பிரகாரம் அவைத் தலைவர் ஒரு தீர்ப்பளித்தால் அந்தத் தீர்ப்புக்கு பணிந்து நடக்க வேண்டுமே தவிர தீர்ப்புக்கு விளக்கம் தெரிவிப்பது முறையல்ல. நீங்கள் ஒரு தீர்ப்பு சொன்னீர்கள். அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னீர்கள். அவர் வருத்தம் தெரிவிக்கிறாரா இல்லையா என்பதை இந்த அவையில் தெரிவிக்கவேண்டுமே தவிர உங்களின் தீர்ப்புக்குக் களங்கம் கற்பிக்கும் முறையில் பேசுவது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்களே இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். உங்களைப்பற்றிச் சொன்னது யார் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள்; இன்னார் என்று எழுத்து மூலம் தாருங்கள். அதன்மீதும் என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். நீங்கள் சொன்னது தெளிவாக இருக்கிறது. ஆனால் இந்தத் தரப்பிலே யார் சொன்னது என்பதை என்னாலும் கண்டுபிடிக்க முடியவில்லை; உங்களுக்குத் தெரிந்தால் நீங்கள் எழுத்து மூலம் தாருங்கள். அது அல்லாமல் யார் சொன்னார்கள் என்று இன்னும் தேடிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் நான் என்ன செய்வது ?

திரு. க. சுப்பு: நான் சொன்னது குறிப்பில் இருக்கிறது என்று நினைக்கிறேன். நான் குறிப்பேட்டைப் பார்க்கவில்லை. அதைப் பார்த்துத்தான் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் என்னைப்பற்றி அவர்கள் சொன்னது குறிப்பேட்டில் இல்லை. இன்னார்தான் சொன்னது என்று அவர்களே கூட சொல்லலாம், நான் கேட்பது அன்றைக்கு அவர்கள் என்னைப்பற்றிச் சொன்னதற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொன்னதற்குப் பதில் சொல்லப் போகிறீர்களா ? அல்லது வேறு விளக்கம் தரப் போகிறீர்களா ?

திரு. க சுப்பு: நான் சொன்னது குறிப்பேட்டில் இருக்கிறது. அதே நேரத்தில் என்னைப்பற்றி அவர்கள் சொன்னது இல்லை. யார் சொன்னது என்பது எனக்குத் தெரிய வேண்டும்; அதற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். சபாநாயகரைப் பற்றிச் சொன்னதை நான் 'வித்ட்ரா' பண்ணிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்னை இத்தோடு விட்டுவிடப்படுகிறது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். அதில்......

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, எனக்கு கொஞ்சம் வாய்தா கொடுங்கள். நான் எதைப்பற்றிக் கொடுத்தேன் என்பதே எனக்கு மறந்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களுடைய ஒழுங்குப் பிரச்னையை நாளை எடுத்துக்கொள்கிறேன்.